## வாக்குமூலம்

## சார்பு நீதிமன்றம், நான்குநேரி

## வழக்கு எண் : SC. 68/2024

## வழக்கு சாட்சி : PW4

| | |
|---|---|
| பெயர் : தவசிமுத்து | தேதி : 06.04.2026. |
| தந்தை பெயர் : செல்வராஜ் | தொழில்: |
| கிராமம்: | சமயம்: |
| தாலுக்கா: | வயது: |

(எதிரி ஆஜர்.).

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 in the day 06.04.2026.

**முதல் விசாரணை**

அரசு தரப்பு வழக்கறிஞர் அ.சா.4 ஐ மீண்டும் அழைத்து முதல் விசாரணை செய்ய மனு தாக்கல் செய்து, அந்த மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் அ.சா.4 கூடுதல் முதல் விசாரணை சாட்சியம்.

ஏற்கனவே நீதிமன்றத்தில் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். எதிரி எங்கள் முன்பாகதான் மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் காவல் ஆய்வாளர் அத்தாட்சி பிறப்பித்து, வெட்டருவாளை எங்கள் இருவர் முன்னிலையில் கைப்பற்றினார். அது நீதிமன்றத்தில் சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அது இன்று என்னால் நீதிமன்றத்தில் அடையாளம் காட்டப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் 6 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். எத்தனை வருடங்களாக குடியிருந்து வருகிறீர்கள் என்றால் 30 வருடங்களாக இந்த ஊரில் குடியிருந்து வருகிறேன். பிள்ளைகுளம் பஸ் ஸ்டாப்பிற்கு எதற்காக சென்றேன் என்றால் வீட்டு வேலை விஷயமாக ஒரு ஆளை பார்க்க சென்றேன். நான் பிள்ளைகுளம் பஸ் ஸ்டாப்பில் எவ்வளவு நேரம் நின்றிருந்தேன் என்றால் 10 நிமிடம் இருந்தேன். எவ்வளவு நேரம் கழித்து போலிசார் அங்கு வந்தார்கள் என்றால் நாங்கள் போய் 5 நிமிடம் கழித்து போலிசார்கள் வந்தார்கள். எதிரி ஓட பார்த்தார். போலிசார் பிடித்து விட்டார்கள். எதிரி ஓட பார்த்தார் என்பதும், போலிசார் பிடித்தார்கள் என்பது' போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. நான் கூறுவதுபோல் எதிரி அங்கு நிற்கவும் இல்லை என்றாலும் போலிசாரை பார்த்து ஓடவும் இல்லை என்றால் சரியல்ல. என்னை காவல் நிலையத்திற்கு எத்தனை மணிக்கு கூட்டிச் சென்றார்கள் என்றால் 02.00 மணியிலிருந்து 02.30 மணிக்குள் என்னையும், எனது தம்பியையும் காவல் நிலையத்திற்கு கூட்டிச் சென்றார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தை யார் எழுதினார்கள் என்றால் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை யாரும் எழுதவில்லை. காவல் நிலையத்தில் வைத்து என்னிடம் எத்தனை கையெழுத்து வாங்கினார்கள் என்றால் ஒரு கையெழுத்தை காவல் நிலையத்தில் வைத்து டைப் செய்து வாங்கினார்கள். மற்றொரு கையெழுத்து எங்கு வைத்து போட்டீர்கள் என்றால் எதிரியின் வீட்டிற்கு பின்புறம் புளியமரத்தின் அருகில் வைத்து இன்னொரு கையெழுத்து போட்டுக் கொடுத்தேன். எனது வீடு அரமனேரி நாடார் தெருவிற்கு வடக்கு பக்கம் தெற்கு பார்த்து உள்ளது என்றால் சரிதான். எதிரியின் வீடு அங்கே வடக்கு பார்த்து உள்ளது என்றால் சரிதான். அ.சா.1 பொன்ராஜ் எனது சித்தப்பா மகன் என்றால் சரிதான். ஆனால் பேச மாட்டோம். நான் சொல்வது போல் எதிரி கைது செய்யப்படவும் இல்லை என்றாலும், எந்த ஒப்புதல்வாக்குமூலமும் கொடுக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரியிடமிருந்து அருவாள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. அருவாளில் இரத்தக்கறை இருந்ததா என்றால் இரத்தக்கறை இருந்தது. எதிரி அருவாளை எங்கு வைத்து இருந்தார் என்றால் புளிமரத்திற்கு அடியில் லேசாக தோண்டி மண்ணை போட்டு மறைத்து வைத்திருந்தார். நான் சொல்வது போல எந்த அருவாளும் கைப்பற்றப்படவிலலை என்றாலும், அ.சா.1 எனது சித்தப்பா மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

புளியமரத்தின் அடி பாகம் 1 அடி அகலம் இருக்குமா என்றால் இருக்கும். அது 10 வருடங்களாக இருக்குமா என்றால் இருக்கும். அது எதிரியின் வீட்டிற்கு பின்புறம் உள்ளது என்றால் சரிதான்.